
தெரியுமா...தமிழ் வெளியீடு-6



# பொலிஸும் சட்டமும்

வெளியீடு
ஜனசங்சதய

ජනසංසදය
ஜனசங்சதய
JANASANSADAYA
People's Forum

அறிவீர்களா? தமிழ் வெளியீடு : 06

# பொலிஸும் சட்டமும்

வெளியீடு
ஜனசங்சதய

அறிவீர்களா? வெளியீட்டு இலக்கம்: 06

பொலிஸும் சட்டமும்

இரண்டாவது திருத்திய பதிப்பு: 2012

**ISBN:**

வெளியீடும் திருத்தமும்:
ஜனசங்சதய

கணினிப் பதிவு:
எஸ். நித்யா

அட்டை அமைப்பு
ஸதமினி பீரிஸ்

விசேட நன்றிகள்:
எம்.என்.ஜே.த.சில்வா, அனுசா பெரேரா, அமிதா பிரியந்தி விஜயபால, முனசிங்க, சட்டத்தரணி ஷாமேன் குணரத்ன, சட்டத்தரணி சுரேஷ் பர்ணாந்து, ஹர்சி பெரேரா.

அனுசரணை
ஆசிய மனித உரிமைக் கமிஷன்
Rct-டென்மார்க்

அச்சகம்:
ஏ.ஜே. பிரின்ட்ஸ்
இல: 44, ஸ்டேஸன் வீதி, தெஹிவளை.

விநியோகம்:
ஜனசங்சதய
81/2- ஆதர் வீ தியெஸ் மாவதை
பாணந்துறை.

தொலைபேசி, தொலைநகல்: 038 22 35191
ஈமெயில்: manava@sltnet.lk.

# அறிமுகம்

ஒவ்வொரு பிரசைக்கும் யாதாயினும் ஒரு சந்தர்ப்பத்தில் பொலிஸ் தேவைப்படும். நாளாந்த வாழ்வில் அடிக்கடி சந்திக்கும் பொலிசைப் பற்றி பொதுமக்கள் கட்டாயமாக அறிந்திருக்க வேண்டிய விடயங்களை ஆராய்ந்து பார்ப்பதன் மூலம் சித்திரவதைகள், அவமதிக்கும் செயல்கள், தண்டனை வழங்கல் ஆகிய பொலிசின் சட்டவிரோத செயல்களைக் குறைந்தளவாக்க முடியும்.

சித்திரவதை, அவமதிக்கும் நடத்தைகள், தண்டனை ஆகியன இல்லாது வாழும் உரிமையைப் பறித்துக் கொண்டதும் அரசாங்கமேயாகும். நாமே எமது உரிமைகளை உறுதிசெய்து சொள்ளவேண்டும். இதற்காக சட்டம் பற்றி அறிந்து கொள்ளவேண்டும்.

# ஆசியுரை

[illegible]

# இலங்கை பொலிஸ்

## 01. பொலிஸில் முறைப்பாடு செய்தல்.

பொலிசில் முறைப்பாடு செய்யும் தேவை ஏற்படும்போது அதனைப் பொலிஸுக்குச் சென்று வாய்மொழி மூலமாகவோ அல்லது பொலிஸுக்குச் செல்லாது தபால் மூலமாக எழுதி அனுப்புவதன் வாயிலாகவோ செய்யமுடியும்.

## 01.1 வாய்மொழி மூல முறைப்பாடு

பொலிஸ் நிலையத்துக்குச் சென்று செய்யும் முறைப்பாட்டை 'வாய்மொழி மூலமான' முறைப்பாடு என அழைப்பர். பொலிஸ் வாய்மொழி மூல முறைப்பாட்டை ஏற்க மறுத்தல், மாற்றி எழுதுதல் ஆகியன சட்ட விரோதமாகும். அது மாத்திரமல்ல, செய்யப்படும் வாய் மொழி மூல முறைப்பாட்டை பதிவு செய்யும் அலுவலரி னால் வாசித்து விளக்குதல் வேண்டும். இதனைச் செய்யத் தவறுவது சட்டவிரோதமாகும்.

முறைப்பாட்டை முறைப்பாட்டாளரின் தாய்மொழியிலேயே எழுதிக் கொள்ளவேண்டும். இது அடிப்படை உரிமையா கும். தனது தாய்மொழியில் முறைப்பாட்டை எழுதிக் கொள்ளாதிருப்பின் அதுவும் சட்டவிரோதச் செயலாகும்.

## 01.2 எழுத்து மூல முறைப்பாடு

எழுத்து மூலமான முறைப்பாட்டைச் செய்யும் போது முழுப்பெயர், முகவரி, வயது, சமயம், விவாக நிலை தொழில், முறைப்பாட்டை அனுப்பும் திகதி ஆகியன தெளிவாக எழுதப்படல் வேண்டும். தனது முறைப்பாட்டில் குறிப்பிடும் விடயமும் கடைசியாக தான் எதிர்பார்க்கும் நிவாரணமும் (தனது கோரிக்கையும்) குறிப்பிடப்பட

வேண்டும். கடைசியாக மேற்படி விடயங்கள் உண்மையானவை என உறுதிப்படுத்தி தனது கையொப்பத்தை இட்டுப் பதிவுத் தபால் மூலம் குறித்த பொலிஸ் நிலையப் பொறுதிப்பதிகாரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். மேற்படி முறைப்பாட்டின் பிரதிகள் பிரதேசத்திற்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகருக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் அனுப்பி வைக்கப்பட வேண்டும். முறைப்பாட்டை தாளில் ஒருபக்கத்தில் மாத்திரம் எழுதுதல் வேண்டும். (தட்டச்சு செய்ய முடியுமாயின் மிகவும் சிறந்தது) முறைப்பாட்டின் ஒரு பிரதி தம்மிடம் வைத்திருத்தல் வேண்டும். பொலிஸுக்குச் சென்று வாய்மொழி முறைப்பாடொன்று செய்ய முயலும் ஒரு சந்தர்ப்பத்தில் அதனை ஏற்க மறுக்கும் போது அல்லது, வாய்மொழிமூல முறைப்பாட்டை திரித்து பிழையாகப் பதிவு செய்யும்போது அதுபற்றி தாமதமின்றி எழுத்து மூலமாக முறைப்பாடு செய்தல் வேண்டும். பொலிஸுக்குச் செல்ல முடியாதபோது எழுத்து மூல முறைப்பாட்டைத் தாமதமின்றி அனுப்புதல் மிக முக்கியமானதாகும்.

## 02. முறைப்பாட்டின் பிரதியைப் பெறல்.

சிவில் வழக்கொன்றின் ஒரு கட்சிக்காரருக்கு தான்செய்த முறைப்பாட்டின்/வெளிப்படுத்தலின் பிரதியொன்றைப் பெறமுடியும். குற்றவியல் வழக்கொன்றின் எதிர்வாதியி னால் தனக்கு எதிராகச் செய்யப்பட்ட முறைப்பாட்டையும் பிரதிவாதியின் (வழக்காளியின்) வெளிப்படுத்தலின் பிரதியொன்றையும் பெறமுடியும். தனக்கு எதிராகச் செய்த முதலாவது முறைப்பாட்டின் பிரதியை வழங்க பெரும்பாலான பொலிஸ் நிலையங்கள் மறுப்புத் தெரிவிக்கும். அது ஒரு சட்டவிரோதச் செயலாகும்.

## 03. கேட்கும் கேள்விகளுக்கு விடையளித்தல்

பொலீஸார் கேட்கும் எல்லாக் கேள்விகளுக்கும் விடை கூறப் பிரசைகள் கடப்பாடுடையவர்கள் அல்ல விசேடமாக சந்தேகநபராக கைது செய்யப்பட்டுள்ள போது தன்னைக் குற்றச்சாட்டுக்கு ஆளாக்கப்படும் விதத்தில் கேட்கப்படும் கேள்விகளுக்கு விடையளிப்பதற்கு கட்டுப்பட்டவர் அல்ல. அவ்வாறான சந்தர்ப்பங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். கட்டாயப்படுத்தி தகவல் பெறுதல் சட்டவிரோதமானது.

## 04. வாக்குமூலங்களின் செல்லுபடியாகும் தன்மை.

பொலீஸாரினால் கட்டாயப்படுத்தி பெற்ற அல்லது விருப்பத்தின் பேரில் பெற்ற வாக்குமூலமொன்றை சாட்சியாக உறுதிப்படுத்தி பயன்படுத்த முடியாது. எனினும் சந்தேக நபரின் வெளிப்படுத்தலின் அடிப்படையில் யாதாயினும் பொருட்கள்/பண்டங்கள் கண்டுபிடிக்கப் பட்டதாயின் குறித்த வாக்கியத்தை மாத்திரம் சாட்சியாகச் சமர்ப்பிக்கலாம். மேலும் வாக்குமூலம் அளித்த நபர், சாட்சியளிப்பாராயின், அச்சாட்சியை உடைப்பதற்கு அல்லது, பலப்படுத்துவதற்கு வாக்குமூலத்தை உபயோகிக்கலாம்.

## 05. கைது செய்தல்

சந்தை போன்ற இடமொன்றில் நிற்கும் போது அல்லது இரவுநேரப் பயணமொன்றின்போது கைது செய்ய பொலீஸாரினால் முடியாது. நியாயமான சந்தேகம் ஏற்படும் போது அல்லது அது பற்றி திருப்தி அடையக்கூடிய தகவல் ஒன்றின்மீது மாத்திரமாகும்.

கைது செய்யும்போது அவர் எந்தக் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்படுகின்றார் என கைது செய்யப்

படும் நபருக்குத் தெளிவாக கூறப்பட வேண்டும். அவ் வாறின்றி நினைத்தவாறு செய்யப்படும் சகல கைதுகளும் சட்டவிரோதமானவை.

### 06. தடுத்து வைத்துள்ள நபர்களை வேலையில் ஈடுபடுத்தல்.

கைது செய்யப்பட்டு தடுத்து வைத்துள்ள நபர்களை பொலிஸ்நிலையத்தில், அதிகாரிகளின் வீடுகளில் அரசியல்வாதிகளின் வேலைகளுக்காக/ விருப்பு வெறுப்புக்களுக்காக ஈடுபடுத்தும் சந்தர்ப்பங்கள் உள்ளன. அவ்வாறான செயல்கள் சட்டவிரோதமானவையாகும்.

### 07. விரல் அடையாளத்தை பெறல்

ஒரு குற்றம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படும் ஒருவரின் விரலடையாளத்தையோ உடலின் வேறு பகுதி அடையாளத்தை அந்நபரின் விருப்பம் இன்றிப்பெற பொலீஸாருக்கு உரிமையில்லை. அவ்வாறான செயல் சட்டவிரோதமானதாகும்.

### 08. விடுவித்தல்/தடுப்புக் காவலில் வைத்தல்.

கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டதன் பின்னர் அந்நபர் பொலீஸாரினால் நிபந்தனையுடன் நிபந்தனையின்றி அல்லது பிணையின் மீது விடுவிக்கப்படு வார். அவ்வாறின்றேல் நீதவான் முன்னால் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**அவ்வாறான சமயத்தில்,**

அ) சித்திரவதைக்குள்ளாகியிருந்தால் உடனடியாக ஒரு பிரதான அரசாங்க மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெறவும்.

ஆ) 23,24,25 ஆம் பந்திகளில் குறிப்பிட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றுங்கள்.

இ. நீதவான் முன் ஆஜர்படுத்தும் போது சித்திர வதைக்கு உட்படுத்தப்பட்டிருந்தால் அது பற்றி அறிவியுங்கள். உங்கள் சார்பாக ஒரு சட்டத்தரணி ஆஜர் ஆவாராயின் அவர் மூலமாக அறிவிக்க நடவடிக்கை எடுங்கள்.

## 09. பணயக் கைதியாக வைத்திருத்தல்.

சந்தேக நபர்களைக் கைதுசெய்ய முடியாதபோது, குறித்த சந்தேகநபரின் பெற்றோர், நெருங்கிய உறவினர்கள் அல்லது நண்பர்களைக் கைதுசெய்து பணயக்கைதிகளாக பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கும் சந்தர்ப்பங்கள் உண்டு. எனினும் எக்காரணத்தினாலும் சந்தேகநபர் ஒருவருக்கு பதிலாக அல்லது சந்தேக நபரை பொலிஸுக்கு கொண்டுவரும் உத்தியாக வேறு ஒருவரைத் தடுத்து வைக்கப் பொலீஸாரினால் முடியாது. அவ்வாறான சந்தர்ப்பம் சட்டவிரோமானதும் அடிப்படை உரிமை மீறலுமாகும்.

## 10. பெண்களையும் பிள்ளைகளையும் சோதனை செய்தல்/ கைது செய்தல்/ தடுத்து வைத்தல்.

ஒரு பெண்ணைச் சோதனை செய்யும் தேவை ஏற்படும் போது வினயமாக பெண்/ பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரினால் சோதனை செய்தல் வேண்டும். பெண் ஒருவரை பெண் ஒருவரின் கீழேயே தடுத்து வைத்தல் வேண்டும். ஒரு பிள்ளையை மூத்தோரின் பாதுகாப்பின் கீழேயே வைத்தல் வேண்டும்.

## 11. வீடு வாசல்களை சோதனை இடல்.

இதற்காக நீதவான் ஒருவரிடமிருந்து தேடல் எழுத்தாணை

(Search Warrant) பெற்றிருத்தல் வேண்டும். விசேட சந்தர்ப்பங்களில் அதாவது தேடல் எழுத்தாணை பெற்று வரும்போது சந்தேகநபர்கள் தப்பியோட வாய்ப்பு கிடைத்தல் போன்ற சந்தர்ப்பமொன்றின்போது தேடல் எழுத்தாணை இன்றி வீடுவாசல்களைச் சோதிக்க முடியும். அதற்காக குறித்த விடயம் பற்றிய காரணங்களை விளக்கிய பின்னர் சோதனையை நடாத்துதல் வேண்டும். அவ்வாறன்றி தான் விரும்பியவாறு சோதனை நடத்துதல் சட்டவிரோதமாகும்.

## 12. இரவு நேரங்களில் வீடு வாசல்களைச் சோதனையிடல்.

தாம் பொலீஸார் எனக் கூறியபடி இரவு நேரத்தில் வீடு வாசல்களைச் சோதனையிட ஒரு குழுவினர் வரும்போது அவர்களது அடையாளத்தை உறுதி செய்யுமாறு அவர்களிடம் கேட்க வேண்டும். அதற்கு உங்களுக்குப் பூரண உரிமை உள்ளது. மேலும் அடையாளத்தை உறுதி செய்து கொள்ள பிரதேசத்தின் கிராமசேவை உத்தி யோகத்தருடன் வருமாறு அவர்களைக் கோருங்கள்.

அவ்வாறு வரமுடியாதாயின் பகல் நேரத்தில் வருமாறு அவர்களிடம் கேளுங்கள். அதுவரை கதவைத் திறக்க வேண்டாம். பலாத்தகாரத்திற்கு உங்கள் எதிர்ப்பைத் தெரிவியுங்கள். அதற்கு பூரண உரிமை உங்களுக்கு உண்டு.

## 13. வெளிப்படுத்தல்களில் கையொப்பம் பெறுதல்.

பொலீஸாரினால் பெறப்படும் வெளிப்படுத்தல்களை அவர்களே அதனை வாசித்து விளக்கிய பின்னர் தாம் கூறிய விடயங்கள் அதில் இருக்குமாயின் மாத்திரமே கையொப்பம் இடவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் கையொப்பம் இடுவதை நிராகரியுங்கள். அதற்கு உங்க

ளுக்கு பூரண உரிமை உள்ளது. பலாத்காரமாக வெளிப் படுத்தல்களில் கையொப்பம் பெறல் சட்டவிரோதமானது. மேலும் அந்த வெளிப்படுத்தல்களின் சட்டரீதியான தன்மை இல்லாமற் போகும்.

## 14. சித்திரவதை செய்தல்.

கைது செய்யாது, கைது செய்யும்போது அல்லது கைது செய்து தடுத்து வைத்துள்ளபோது ஒருவருக்கு உடல் அல்லது உளரீதியாக சித்திரவதை செய்தல், அவமானகரமாக நடாத்துதல் ஆகியன சட்டவிரோதமான செயல்களாகும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் சட்ட நடவடிக்கை எடுக்கத் தயங்க வேண்டாம். சித்திரவதை செய்த அல்லது பொய் வழக்கு தாக்கல் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க ஆவன செய்யுங்கள்.

## 15. பொய்யான குற்றச்சாட்டுக்களின் பேரில் வழக்குத் தொடரல்

சட்டரீதியற்ற முறையில் கைது செய்வதும், சட்டவிரோத மான முறையில் தடுத்து வைத்தலும், சித்திரவதை செய்தலும் அதன் பின்னர் 'பொய் குற்றச்சாட்டின்' பேரில் வழக்குத் தொடருவதும் இன்று சாதாரண விடயங்களாக மாறியுள்ளன.

அவ்வாறு பொய்க் குற்றச்சாட்டின்பேரில் வழக்குத் தொடர்ந்ததன் பின்னர், பொலிஸூம், பொலீஸில் தங்கி வாழும் வழக்கறிஞர்களும் நீதிமன்றத்தின் முன்னர் குற்றவாளி என ஏற்றுக்கொள்ளச்செய்ய சகல முயற்சி களையும் எடுப்பார்கள். இவ்வாறான பொய்க் குற்றச் சாட்டுக்களின் பேரில் வழக்கு தொடரும் செயல்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க ஆவன செய்யுங்கள்.

### 16. பொலிஸ் வழிவிட்டுச் செல்லும்போது....

குற்றம் தொடர்பாக செய்த முறைப்பாட்டின் பேரில் பொலிஸ் விசாரணை செய்யாது இருக்கும்போது, பொலிஸ் வழக்குத் தொடராதபோது, அதுபற்றி நீதவான் ஒருவரிடம் சென்று வாய்மொழி மூலமாக அல்லது வழக்கறிஞர் ஒருவர் மூலமாக, எழுத்து முறைப்பாடு செய்து வழக்கொன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுங்கள்.

### 17. முறைப்பாடு செய்யும் போது ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டியன.

அம்முறைப்பாட்டில், அச்சந்தர்ப்பத்தில் தான் அறிந்த தகவல்கள் யாவற்றையும் கூறுங்கள். உதாரணமாகக் கைது செய்த பொலிஸ் நிலையம், பொலிஸ் உத்தியோகத்தர்களின் பெயர்கள்/இலக்கங்கள், வாகனத்தைப் பற்றிய தகவல்கள், கைது செய்த இடம், ஆகியனவும், திகதி நேரம், கைது செய்ய எத்தனை பேர் வந்தார்கள், அவர்கள் கூறிய விடயங்கள் போன்றவை பற்றியும், அவர்கள் எந்த உடையில் வந்தார்கள்/ சாதாரண உடையிலா, சீருடையிலா, ஆயுதங்கள் இருந்தனவா என்பன போன்ற தகவல்களும் மிக முக்கியமானவையாகும்.

### 18. கைது செய்த பின்னர் சித்திரவதை செய்திருந்தால் உறவினர்கள் அந்நபரைப் பார்வையிட இடமளிக்காதிருந்தால்...

கைது செய்யப்பட்டவரை 24 மணித்தியாலங்களுக்குக் கூடிய நேரம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருந்தால் அது பற்றி உடனடியாக இப்பிரசுரத்தில் இறுதிப் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களிடம் நிறுவனங்களிடம் முறையீடு செய்யுங்கள். கைது செய்து தடுத்து வைத்திருப்பவரைப் பார்வையிடுவதற்கு, சுகம் விசாரிப்பதற்கு, உணவு, பானம், மருந்து பெறுவதற்கு உள்ள

உரிமைக்கு பொலீஸார் தடை ஏற்படுத்துவார்களாயின், அச்சந்தர்ப்பங்களிலும் மேலே குறிப்பிட்டவாறு முறையீடு செய்யுங்கள். அவ்வாறு முறையிட்டதன் பின்னர் முறை யீட்டின் பிரதி ஒன்றைத் தாமதமின்றி பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்து முறையீட்டை உறுதிப்படுத்துவதும் முக்கியமாகும்.

**19. சட்டத்தரணிகளின் உதவியைப் பெற்றுக் கொள்ளல்.**

கைது செய்யப்பட்ட நபர் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காகச் சட்டத்தரணி ஒருவரின் உதவியைப் பெற்றுக் கொள்வதாயின், குறித்த சட்டத்தரணி பொலீஸா ருக்குச் சார்பாக நடந்து கொள்ளாத தனது சேவை பெறுநர் பற்றி நீதிமன்றத்தில் எடுத்துரைக்கும் ஆற்றல் உள்ள நேர்மையனவராக இருத்தல் அவசியம் என வலியுறுத்துகிறோம். கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைத்துள்ள நபரைப் பார்ப்பதற்கு சட்டத்தரணி ஒருவரை பொலிஸுக்கு அனுப்புவதாயின், அந்நபரின் நிலைமை பற்றிய அறிக்கையொன்றைப் பெற்றுக் கொடுக் கவும், அது பற்றிய தகவல்களை நீதிமன்றத்தில் எடுத்து ரைத்து பதிவாக்கம் செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**20. வைத்தியர் முன் ஆஜராகுதல்.**

கைது செய்த நபர்களை நீதவான் முன் ஆஜர் செய்வதற்கு முன்னர் அரசவைத்தியர் முன் ஆஜர் செய்து மருத்துவ அறிக்கையொன்றைப் பெற்றுக்கொள்ள பொலீஸார் பெரும்பாலும் முயற்சி செய்வார்கள். தன்னைக் கைது செய்ததன் பின்னர் சித்திரவதைக்கு ஆளாக்கப் பட்டிருந்தால் அதுபற்றி, மருத்துவரிடம் முறையிட வேண்டும். மருத்துவர் அந்நபரை பொலீஸார் முன்னிலை யில் அல்லது தனிப்பட்ட முறையில் சோதனை செய்தல்

வேண்டும். அவ்வாறு அந்நபரைப் பொலீஸார் முன்னிலையில் சோதிப்பாராயின் அச்சமயம் அம் மருத்துவர் சட்டவிரோதமாகச் செயற்படுகின்றார். அதற்கு எதிர்ப்புத் தெரிவியுங்கள். பொலீஸாரின் தாக்குதல் காரணமாகத் தனது உடம்பில் உட்காயங்கள்/காயங்கள் ஏற்பட்டிருந்தால் அது பற்றி மருத்துவரிடம் காட்டுங்கள். உங்களை மருத்துவமனையில் சேர்க்குமாறு கேட்டுக் கொள்ளுங்கள்.

**21 நீதவான் முன்பாக ஆஜர் செய்தல்.**

நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்படும்போது தான் தாக்கப்பட்டதாக/ சித்திரவதை செய்யப்பட்டதாக அவரிடம் கூறவேண்டும். குறிப்பிட்ட நபர் சார்பாக சட்டத்தரணி ஒருவர் ஆஜராகும் பட்சத்தில், குறித்த சட்டத்தரணி (20இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) தனது சேவை பெறுநர் தாக்கப்பட்டுள்ளது பற்றி/ சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது பற்றி நீதவானுக்கு அறிக்கை செய்து அவரை அல்லது அவரைச் சட்ட மருத்துவ அதிகாரி ஒருவரின் சோதனைக்கு ஆஜர்படுத்துவதற்கான உத்தரவொன்றைப் பெற்றுக் கொள்ளவேண்டும். யாதாயினும் குற்றத்திற்காக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படும் நபர்களை பொலீஸ் குறித்த காலத்தினுள் விடுதலை செய்யாவிட்டால் அந்நபர்களை நீதவான் முன்பதாக ஆஜர் செய்தல் வேண்டும். நீதவான் முன்பதாக ஆஜர் செய்யும் போது பொலீஸ் பின்பற்றும் விதிமுறைகளை அறிந்து வைத்திருத்தல் வேண்டும். முக்கியமாக சித்திரவதை செய்யப்பட்டவர்களையோ தடுப்புக்காவலில் வைக்கும் நோக்கம் உள்ளபோது பகிரங்க நீதிமன்றத்தில் ஆஜர் செய்யாது நீதவான் முன்னால் குறித்த சந்தேகநபரை ஆஜர் செய்ய பொலீஸார் முற்படுவர். இதற்காகப் பொலீசார், நீதிமன்ற அலுவல் நேரமல்லாத

மாலை/ இரவு நேரங்களையோ அரச விடுமுறை நாட்களையோ விசேடமாகப் பயன்படுத்துவர்.

இச்சந்தர்ப்பங்களில் நீதவானின் அல்லது பதில் கடமையாற்றும் நீதாவானின் இல்லத்திற்கு சந்தேகநபர் அழைத்துச் செல்லப்படுவர். இவ்வாறான சமயங்களில் சட்டத்தரணிகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளல் மிகச் சிரமமான காரியமாகும். மேலும் பிணை பெறுவதும் சிரமமானதாகும். சந்தேகநபருக்கு வாக்குமூலமொன்றை வழங்கவும் வாய்ப்புக் கிட்டாது. தன்னைத் தடுப்புக்காவலில் வைக்க உத்தரவிட்டவர் யார் என்பதைக்கூட சந்தேகநபர் அறியமாட்டார். சந்தேகநபர் பொலிஸ் வாகனத்தினுள் இருக்கும்போதே 'கொமிடலுக்கு' கையொப்பம் பெறுதல் பெரும்பாலும் நடைபெறும் நிகழ்வாகும்.

இத்தகைய சந்தர்ப்பங்களில் வாழாவிருக்கக் கூடாது. வாய்ப்புக் கிட்டும் முதற் சந்தர்ப்பத்திலேயே இவை பற்றி வெளிப்படுத்த வேண்டும்.

## 22. தடுப்புக்காவலில் வைத்தல்

தடுப்புக் காவலில் வைக்கப்படும் சமயத்தில் தான் பொலீஸாரினால் சித்திரவதைக்கு ஆளக்கப்பட்டதாக அல்லது தாக்கப்பட்டதாக சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு அறிவித்தல் வேண்டும். முடியுமாயின் வாக்குமூலமொன்றையும் பதிவுசெய்து கொள்ளவும்.

## 23. நீதிமன்ற நடவடிக்கைகள்.

அடிப்படை உரிமையின் கீழ் வழக்குத் தாக்கல் செய்தல், சட்டவிரோதமான முறையில் கைது செய்தல், சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்படல், அவமதிக்கும் வகையிலான செயல்களுக்கு உட்படுத்தப்படல், போலிக் குற்றச்சாட்டின் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படல் போன்றவை தொடர்பாக அடிப்படை உரிமை வழக்கொன்றைத் தாக்கல் செய்ய

சகல பிரசைகளுக்கும் உரிமை உள்ளது. அரசியல்யாப்பின் மூலம் தாபிக்கப்பட்டுள்ள இவ்வுரிமையின் கீழ் வழக்குத் தொடர 30 நாட்கள் அவகாசம் உண்டு. சம்பவம் நடந்த தினத்திலிருந்து அல்லது குறித்த நபர் விடுதலை பெற்ற தினத்திலிருந்து இம் முப்பதுநாட்கள் கணிக்கப்படும்.

(உதாரணமாக மருத்துவமனையிலிருந்து வெளியேறிய தினத்திலிருந்து அல்லது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தால் விடுவிக்கப்பட்ட தினத்திலிருந்து)

அடிப்படை உரிமை வழக்கொன்றை சட்டத்தரணி ஒருவர் மூலமோ தானாக பிரதம நீதியரசருக்கு எழுத்துமூல கோரிக்கையொன்றை விடுவதன் மூலமே ஆரம்பிக்க முடியும்.

**24. நீதிமன்றத்திற்கு வெளியே நடவடிக்கை எடுத்தல்.**

சட்டவிரோதமான முறையில் கைது செய்தல், சித்திரவதைக்கு ஆளாக்கப்படல், மானபங்கப்படுத்தல் இழிவுபடுத்தல், போலிக் குற்றச்சாட்டுக்கள், பொலிஸாரினால் கவனியாது விடப்படல் போன்ற சகல செயல்களும் சட்டவிரோதமானவையாகும்.

அ) மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு எழுத்துமூலமாக முறையிடுங்கள். மேற்படி விடயம் தொடர்பாக தொலைபேசி மூலமோ/ பக்ஸ் மூலமோ அதற்கு முன்னர் அறிவித்திருந்தால் அது பற்றியும் அங்கு குறிப்பிடுங்கள்.

ஆ) தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கும்,

இ) பொலீஸ்மா அதிபருக்கும், குறித்த பொலிஸ் நிலையத்திற்குப் பொறுப்பான பிரதிப்பொலிஸ்மா அதிபருக்கும் சிரேட்ட பொலிஸ் அத்தியட்சகருக்கும்

ஈ) அதேபோன்று சட்டமா அதிபருக்கும் முறை யிடுங்கள்.

**25. நட்டஈட்டைப் பெறல்.**

இதற்கு மேலதிகமாக சம்பவதினத்திலிருந்து இரண்டு வருட காலத்தினுள் மாவட்ட நீதிமன்றத்தில், தனக்கு ஏற்பட்ட சேதங்களுக்காக நட்டஈடு வழக்கொன்றையும் தாக்கல் செய்யமுடியும். இதனை சட்டத்தரணி ஒருவர் மூலம் செய்தல் வேண்டும். அரச உத்தியோகத்தர் ஒருவருக்கு எதிராக அவரது கடமை தொடர்பாக நட்டஈட்டு வழக்கைத் தாக்கல் செய்யும் போது பின்பற்றப்பட வேண்டிய விதி முறைகளைச் சரியாக இனங்கண்டு செயற்படல் மிக முக்கியமானதாகும்.

**26. சித்திரவதைகளுக்கு எதிரான சட்டம் (1994 இன் 22 இலக்கச் சட்டம்)**

இச்சட்டத்தின் கீழ் சித்திரவதைகளுக்கும் மானபங்கப்படுத்தல்களுக்கும் நபர்களை உள்ளாக்கும் பொலீஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக சட்டமா அதிபரினால் மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவேண்டும். அச்சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரு மாறு சட்டமா அதிபரை வற்புறுத்தவேண்டும். சித்திரவதை செய்தல், கொடூரமான மனிதாபிமானமற்ற முறையிலான அவமானகரமான முறையில் நடாத்துதல் போன்ற 1994ம் ஆண்டின் 22ம் இலக்க சட்டத்தின் கீழ் 7வருடங்களுக்கு குறையாத சிறைத்தண்டனைக்கும் 10,000/- ரூபாய்க்குக் குறையாத அபராதத்திற்கும் உரிய குற்றமாகும்.

**27. தண்டனைக் கோவைச்சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்தல்.**

பொலீஸாரினால் நடாத்தப்படும் சித்திரவதைகள் பற்றி குறித்த

உத்தியோகத்தர்களுக்கு எதிராக பொலிஸ் மூலம் தண்டனைக் கோவைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்படும். குறித்த பொலிஸ் நிலையம்/ பொலிஸ் விசேட அலகினால் இவ்வாறு வழக்குத் தாக்கல் செய்யும் அதேசமயம் சட்டமா அதிபரின் அறிவுரைக்கு ஏற்ப குறித்த பொலிஸ் நிலையப் பொலிஸ் குற்றவியல் பிரிவின் விசேட விசாரணை அலகு வழக்குத் தொடரும் சந்தர்ப்பங்களும் உண்டு.

**28. தனக்கு எதிராக (குற்றஞ்சாட்டப்பட்டுள்ள போது) உள்ள வழக்கின்/ தான் வழக்காளியாக (பாதிக்கப்பட்ட தரத்தவராக) உள்ள வழக்கின் அறிக்கையை ஆரம்ப கட்டத்திலேயே கூடுமானவரை விரைவில் பெற்றுக்கொள்ள வேண்டும்.**

அதன் மூலம் தனக்கெதிரான குற்றச்சாட்டு எதுவெனத் திட்டவட்டமாக அறிந்துகொள்ள முடியும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தனக்கு எதிரான வழக்கின் குற்றச்சாட்டுக்கள் எவையெனத் திட்டவட்டமாக அறியத் தனக்கு சந்தர்ப்பம் கிடைக்காது. ஆகவே வழக்கு அறிக்கையைப் பெறல் மிகமுக்கியமானதாகும். இவ்வாறே பாதிக்கப்பட்ட தரத்தினரும் செயற்படவேண்டும்.

வழக்கு அறிக்கையைப் பெறுவதற்காக 'தன்னால்' நீதிமன்றப் பதிவாளருக்கு சமர்ப்பிக்கும் பிரேரணை (Motion) குறித்த கட்டணத்தைச் செலுத்தி வழக்கு அறிக்கையைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

எனினும் சில நீதிமன்றப் பதிவாளர்கள் தாங்கள் முன்வைக்கும் பிரேரணையை நிராகரிக்கக் கூடும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் தனக்கு வழக்கறிக்கையைப்

பெறுவதற்குள்ள உரிமைபற்றி அவரிடம் தெளிவாக எடுத்துக் கூறவும்.

## 29. நீதியை நிலைநாட்டுவதில் உள்ள தடைகள்.

இன்று நீதியை நிலைநாட்டுதல் மிகவும் கஷ்டமான பணியாக உள்ளது. அதற்கு முக்கிய காரணம் உயர் மட்டங்களில் உள்ளவர்களின் கீழ்த்தர நடவடிக்கைகளாகும்.

இன்று நீதியை நிலைநாட்டும் செயன்முறையுடன் தொடர்புடைய வாண்மையாளர்களில் பெரும்பாலானோரின் ஒழுக்கக் குறைவான நடவடிக்கைகளே அதற்குக் காரண மாகும். வாண்மையாளர்களின் ஒழுக்கக்கேடான, சட்ட விரோத செயல்களின் முன்னால் சட்டத்தின் மேலாதிக் கத்தை வலுவிழக்கச் செய்தல் அதற்குக் காரண மாகின்றது.

## 30. மருத்துவ சோதனைகள்

தனக்கு முன்னால் ஆஜர் படுத்தப்படும் எந்த ஒரு நபரையும் சோதனை செய்யாமல் அல்லது வேறொருவரின் விருப்பதின் பேரில் நடந்துகொள்ளல் அல்லது பொய்யான மருத்துவ சான்றிதழ்களை அளித்தல் பொலீஸாரின் அல்லது படையினரின் முன்னால் சோதனை செய்தல் ஆகியன சட்டவிரோதமானதும், மருத்துவ ஒழுக்க நெறிகளுக்கு எதிரான செயலும் ஆகும். சில சமயங்களில் அரசாங்க மருத்துவர்களின் வீடுகளுக்கும் அவர்களது தனிப்பட்ட சிகிச்சை நிலையங்களுக்கும் சந்தேக நபர்களை ஆஜர் செய்து அறிக்கையைப் பெறுவதுண்டு. இவ்வாறான சமயங்களில் அச்சம்பவங்கள் பற்றி நீதிமன்றத்திற்கும், மருத்துவசபைக்கும், மருத்துவ நிலைய பிரதானிகளுக்கும் முறையிடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

## 31. நீதிபதிகள் சட்டத்தை மீறும்போது,

கைது செய்யப்படும் நபர்கள் தமது குற்றமற்ற தன்மைக்குக் காரணம் கூறவும், பிணை கூறுவதற்குள்ள சந்தர்ப்பங்களை தடை செய்வது பொலிஸார் பின்பற்றும் சுலபமான செயன்முறையாகும். பகிரங்க நீதிமன்றத்தைத் தவிர்த்து நீதவான்களின் வீடுகளுக்கு அழைத்துச்சென்று ஆஜர்படுத்தல் அவர்களது நடைமுறையாகும். அவ்வாறான சமயங்களில் கைது செய்யப்பட்ட நபர்கள்பற்றி எதுவித ஆராய்தலுமின்றி பொலிஸாரின் கோரிக்கைக்கேற்ப தடுப்புக்காவலில் வைக்கும் சந்தர்ப்பங்கள் பலவாகும். மேற்படி சட்டவிரோத செயல்கள் தொடர்பாக பிரதம நீதியரசருக்கோ நீதிச்சேவை ஆணைக்குழுவிற்கோ முறைப்பாடு செய்தல்.

**உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.**

மேலும் பொலிஸாரின் தேவைக்காக நபர்களைத் தடுப்புக் காவலில் வைக்கும் சந்தர்ப்பங்கள் பலவாகும்.

பெரும்பாலும் பொலிஸாருடன் நெருங்கிய தொடர்பைப் பேணும் 'பதில் கடமையாற்றும் நீதவான்களை' தெரிந்து அவர்களிடம் சந்தேக நபர்களை ஆஜர் செய்யும் நடவடிக்கை மிகவும் பரவலாக நடைபெறும் செயலாகும்.

மேற்படி எல்லாச் சந்தர்ப்பங்களிலும், வாய்ப்புக் கிடைத்த வுடன் முறைப்பாடு செய்யவேண்டும். இவை தொடர்பான மௌனம் தவிர்க்கப்பட வேண்டும்.

## 32. சட்டத்தரணிகளின் சட்டவிரோதச் செயற்பாடுகள்.

தடுத்து வைக்கப்பட்ட நபர்களுக்காக ஆஜராகும் சில சட்டத்தரணிகள் தனது சேவை பெறுநர் தொடர்பாகச் சட்டவிரோதமாகக் கைது செய்ததாக, சித்திரவதைக்கு

ஆளாக்கப்பட்டதாக நீதிமன்றத்தின் முன்னால் குறிப்பிடுவதைத் தவிர்த்துப் பொலிசாரின் தேவையை நிறைவேற்ற செயற்படுவர். சேவை வழங்குனருக்குத் தேவையான விடயங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து அறிக்கை செய்யுமாறு கோருவதில்லை. வழக்கைப் பொறுப்பெடுத்து வழிவிட்டுச் செல்லல், குறித்த கால இடைவெளியில் தேவையான சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்காதிருத்தல், சட்டவிரோதமானதும் சட்டத்தரணிகளின் ஒழுக்க நெறிகளுக்கு எதிரானவையுமாகும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் பிரதம நீதியரசருக்கும், வழக்கறிஞர்களின் சங்கத்திற்கும் குறித்த சட்டத்தரணி பற்றி முறைப்பாடுசெய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

## 33. சட்டமா அதிபர்

குற்றம் தொடர்பாக வழக்குத் தொடரல், அவற்றை வழிப்படுத்தல் ஆகியன சட்டமா அதிபரின் பொறுப்புக்களாகும். பொலீஸாரின் சட்டவிரோத நடவடிக்கைகள், மற்றும் சித்திரவதைகள் தொடர்பாக சட்டமா அதிபர் தனது கடமைகளைச் செய்யாது விடுவது வழக்கம். குற்றவாளிகளுக்கு எதிராக முறையான விசாரணைகள் நடத்தாது வழக்குத் தொடரல், நடவடிக்கைகளைத் தாமதப்படுத்தல் மூலம் பொலீஸாரின் தேவைகளை நிறைவேற்றல் ஆகியனவாகும். வழக்கமாக அவ்வாறான விடயங்களை வெளிப்படுத்தவும், தேசிய மற்றும் சர்வதேசரீதியில் நடவடிக்கை எடுக்கவும் அழுத்தங்கள் பிரயோகிக்கவும் உடனடியாக முன்வரவேண்டும்.

## 34. மனித உரிமைகள் ஆணைக்குழு

அரசியலமைப்பின் மூலம் தாபிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தால் மற்றும் பாதிக்கப்பட்டுள்ள

வர்களுக்கு நிவாரணம் வழங்கல் ஆகியன மேற்படி ஆணைக்குழுவின் பிரதான கடமைகளாகும்.

எனினும், இன்று பொலிஸாரின் சித்திரவதைகளுக்கும் மானபங்கப்படுத்தல்களுக்கும் ஆளாகும் நபர்கள் தொடர்பாக ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் தொடர்பாக திருப்தி அடைய முடியாது.

அரசியலமைப்புக்கு மாற்றமாக நிறுவப்பட்டுள்ள தற்போதைய ஆணைக்குழுவின் தலைவர் உட்பட ஆணையாளர்கள் இன்று செயற்படுவது பொலீஸார் உட்பட மனித உரிமைகளை மீறும் அரச அலுவல்கள், அமைச்சர்கள், மந்திரிகள் போன்றோரைப் பாதுகாப்ப தற்காகவாகும்.

இக்குழுவிற்குச் சட்டரீதியான ஆணையாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். அதற்காக இன்று போராட வேண்டியுள்ளது. மனித உரிமைகள் ஆணைக்குழுவைப் போன்றே, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவும் இன்று சட்டரீதியாக நியமிக்கப்பட்ட ஆணையாளர்களைக் கொண்ட ஒரு நிறுவனமாகும்.

**தேசிய பொலிஸ் ஆணைக்குழு.**

இவ்வெளியீடு பதிப்பிக்கப்பட அளிக்கும் சமயத்திலும் பொலீஸ் ஆணைக்குழு செயலற்றுள்ளது. ஆகவே அது செயற்பட ஆரம்பிக்கும்வரை முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. இன்று அது மிகப் பலவீனமான நிலையில் உள்ளது. .

**35. சித்திரவதைக்கு ஆளாக்குதல், பொய்க் குற்றச் சாட்டின் பேரில் வழக்குத் தொடரல், 24 மணி நேரத்திற்குக் கூடுதலாகத் தடுத்து வைத்தலைத்**

**தடுத்தல் ஒருவரைச் சட்டவிரோதமான முறையிலோ சட்டரீதியான முறையிலோ கைது செய்தவுடன், உறவினர்கள், நண்பர்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்.**

1. மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்குத் தொலை பேசி, பக்ஸ் மூலம் அறிவியுங்கள்.

2. தமது பகுதி கிராம சேவை உத்தியோகத்தருக்கு வாய்மொழி மூலம் அறிவித்து குறித்துக் கொள்ளச் செய்யுங்கள்.

3. குறித்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு மின்னஞ்சல், விரைவுத் தபால் (Speed Post) மூலம் அறிவியுங்கள்.

4. குறித்த மாகாண பொலீஸ் அத்தியட்சகருக்கு, உதவிப் பொலீஸ் அத்தியட்சகருக்கு மின்னஞ்சல், விரைவுத் தபால் (Speed Post) மூலம் அறிவியுங்கள்.

5. பொலீஸ் ஆணைக்குழுவிற்கு பக்ஸ் மூலம் அறிவியுங்கள்.

6. பொலீஸ் மா அதிபருக்கு பக்ஸ் மூலம், மின்னஞ்சல் மூலம் முறைப்பாடு செய்யுங்கள். தடுத்து வைக்கப் படுவார்களாயின் உடனடியாக அதுபற்றி மேற்படி நபர்களுக்கு, நிறுவனங்களுக்கு முறைபாடு செய்யுங்கள்.

7. கைதுசெய்த பொலீஸ் அலுவலர்களை இனங்காண்ல். பெயர், இலக்கம், வாகன இலக்கம் ஆகிய தகவல்களை முடியுமாயின் அறிந்து கொள்ளுங்கள்.

8. பொலிஸ் நிலையத்திற்குச் சென்று கைதாகிய நபரின் தகவல்களை விசாரிக்கவும், கைதாகியுள்ள தமது உறவினரை, நண்பரைப் பார்ப்பதற்கும் அவருடன் கதைப்பதற்கும் அவருக்குத் தேவையான உணவு, மருந்து ஆகியவற்றை வழங்கவும், உரிமையுள்ளது. அதனைச் செயற்படுத்துங்கள்.

9. பொலிஸ் நிலையத்திற்குச் செல்ல சட்டத்தரணி ஒருவரின் அல்லது பிரதிநிதி ஒருவரின் உதவியைப் பெற்றுக் கொள்வீர்களாயின், குறித்த சட்டத்தரணி, அதனது பயணம் பற்றி நீதிமன்றத்திற்கு அறிக்கை யொன்றைச் சமர்பிக்க கடமைப்பட்டுள்ளார் என அவருக்கு அறிவியுங்கள்.

10. அரசியல்வாதிகளுக்கு அறிவித்தல், அறிவிக் காதிருத்தல் உங்கள் விருப்பமாகும். அவ்வாறான சமயங்களின் சட்டத்திற்கு முன்னால் செல்லுங்கள். குறித்த அரசியல்வாதி மேற்படி விடயங்கள் பற்றி எதுவும் கூறாதிருப்பின் அவர் பொலீசாருக்குச் சார்பானவர் எனலாம்.

## 36. முறைப்பாடு செய்யவேண்டிய நிறுவனங்களும் விடயங்களும்.

✸ பொலீஸாரினால் செய்யப்படும் சித்திரவதைகள், மான பங்கப்படுத்தும் நடவடிக்கைகள், போலிக் குற்றச்சாட்டின் பேரில் வழக்குத் தொடரல், ஆகிய சட்டவிரோத செயற்பாடுகளைத் தவிர்ப்பதற்காக முறைப்பாடு செய்ய வேண்டிய நிறுவனங்கள்.

பொலிஸ் மா அதிபர், குறித்த பொலீஸ் நிலையத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ் மா அதிபர், சிரேட்ட

பொலீஸ் அத்தியட்சகர், மனித உரிமைகள் ஆணைக்குழு, தேசிய பொலீஸ் ஆணைக்குழு.

- அதிபர், ஆசிரியர்களினால் செய்யப்படும் மாணவ, மாணவியரைத் தாக்குதல், மானப்பங்கப்படுத்தல்- வகுப்புத்தடை, பாடசாலையில் இருந்து விலக்கிக் கொள்ளுமாறு பெற்றோரை வலியுறுத்தல்- விடுகைப் பத்திரத்தைக் கொடுத்தல் போன்ற முறைகேடான சிறுவர் உரிமைகளை மீறுதல் போன்றவற்றைத் தவிர்ப்பதற்காக முறைப்பாடு செய்ய வேண்டிய நிறுவனங்கள்.

  பொலீஸ் மகளிர் மற்றும் சிறுவர் பணியகம், மனித உரிமைகள் ஆணைக்குழு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம்.

  தேசிய பாடசாலையில், கல்வி அமைச்சு, மாகாண பாடசாலையின் மாகாணக் கல்வித் திணைக்களம்.

- கலால் திணைக்களத்தின் சித்திரவதைகள், போலி வழக்குத் தொடரல், போன்ற செயற்பாடுகளைத் தவிர்ப்பதற்காக முறைப்பாடு செய்ய வேண்டிய நிறுவனம்.

  காலால் ஆணையாளர் நாயகம்- மனித உரிமைகள் ஆணைக்குழு.

- மருத்துவர்களின் சட்டவிரோத ஒழுக்க விரோத செயற்பாடுகள் போன்றவற்றை தவிர்ப்பதற்காக முறைப்பாடு செய்ய வேண்டிய நிறுவனங்கள்.

  மருத்துவ நிலையம் உள்ள பிரதேச சுகாதார அத்தியட்சகருக்கு தேசிய மருத்துவமனையாயின், சுகாதார அமைச்சுக்கும், இலங்கை மருத்துவ கழகத்திற்கும்.

* முப்படைகளின் சித்திரவதை- மானபங்கப்படுத்துகின்ற செயல்கள் போன்ற செயற்பாடுகளைத் தவிர்ப்பதற்காக முறைப்பாடு செய்ய வேண்டிய நிறுவனங்கள்.

படைத்தளபதி
மனித உரிமைகள் ஆணைக்குழு
பொலீஸ் மா அதிபர்
சட்ட மா அதிபர்

* சட்டத்தரணிகள்- நீதிபதிகள்- நீதிமன்றக் காரியாலயங்களில் நடைபெறும் சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்பாக.

பிரதம நீதியரசர், நீதிச் சேவை ஆணைக்குழு, சட்டத்தரணிகள் சங்கம்.

**37. நிறுவனங்களின் முகவரிகள் (மேற்படி முகவரிகள், இலக்கங்கள் மாற்றமடையக் கூடும்)**

1. தலைவர்.
மனித உரிமைகள் ஆணைக்குழு
108, பான்ஸ் பிரதேசம்
கொழும்பு- 07
தொலைபேசி: 0112 694925
பக்ஸ்: 0112 694924

2. சட்ட மா அதிபர்
சட்ட மா அதிபர் திணைக்களம்
மீயுடல் நீதிமன்றக் கட்டடத் தொகுதி
கொழும்பு- 12.
தொலைபேசி: 0112 320848

3. நன்னடத்தை சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம்.
150, ALHP கட்டடம்
நாவல வீதி,
நுகேகொட

(குறித்த மாகாணசபையின் நன்னடத்தை சிறுவர் பாதுகாப்புத் திணைக்கள ஆணையாளருக்கு அனுப்ப வேண்டும்)

4. பொலிஸ் மா அதிபர்
பொலிஸ் தலைமையகம்
புதிய செயலகக் கட்டடம்.
கொழும்பு- 01
தொலைபேசி: 0112 327711
பக்ஸ்: 0112 329040

5. தலைவர்
தேசிய பொலீஸ் ஆணைக்குழு
3ம் மாடி ரொடுன்டா டவர்
109, காலி வீதி
கொழும்பு- 03
பக்ஸ் 0112 395864

6. பிரதம நீதியரசர்
பிரதம நீதியரசர் விடுதி
மீயுடல் நீதிமன்றக் கட்டடத் தொகுதி
கொழும்பு-12.

7. பதிவாளர்
நீதிச் சேவை ஆணைக்குழு

238, புதுக்கடை வீதி
கொழும்பு 12
தொலைபேசி: 0112 588798
பக்ஸ்: 0112 581118

8. பணிப்பாளர் நாயகம்
லஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு
36, மல்லசேகர வீதி,
கொழும்பு- 07
தொலைபேசி: 0112 595039
பக்ஸ்: 0112 596014
திடீர் தொடர்: 1954

9. ஆணையாளர்
கலால் திணைக்களம்
28, ஸ்ரேபல் வீதி
கொழும்பு- 02
பக்ஸ்: 112 300165

10. செயலாளர்
இலங்கை மருத்துவக் கழகம்
31, நொரிஸ் கனல் வீதி,
கொழும்பு- 10.
தொலைபேசி: 0112 2778912

11., தலைவர்
சட்டத்தரணிகள் சங்கம்
153, மிஹிந்து மாவத்தை
கொழும்பு-12.
தொலைபேசி: 0112 386386
பக்ஸ்: 0112 386386

பொலீஸில் பாடசாலையில் அல்லது வேறு எந்த ஒரு நிறுவனத்திலோ குடிமக்களின் கௌரவத்திற்குப் பங்கம் ஏற்படக் கூடியவாறு குறித்த நிறுவனங்களின் அலுவலர்கள், ஊழியர்கள் செயற்படுவர்களாயின் அதன் மூலம் தெளிவாவது குறித்த அலுவலர்கள் அல்லது ஊழியர்கள் கௌரவம் அளிக்கத் தெரியாதவர்கள் என்பதாகும்.

உள்ளூராட்சி மன்ற, கூட்டுதாபனங்களின், எல்லா அரச, அலுவலர்கள், ஊழியர்கள் சம்பளம் மற்றும் கொடுப்பனவு வழங்குவது பொதுமக்களின் வரிப்பணத்தின் மூலமாகும். அதனை மறந்து செயற்படும் ஊழியர்களுக்கும் அலுவலர்களுக்கும் மதிப்பில்லை.

எந்த ஒரு நிறுவனத்தினது ஊழியரோ, அலுவலரோ பொதுமக்களின் எஜமான்கள் அல்ல. அவர்கள் பொதுமக்களின் ஊழியர்களே.

கைது செய்யப்படுவதையும், சித்திரவதைக்கு ஆளாக்கப்படுவதையும், போலி குற்றச்சாட்டின் பேரின் வழக்குத் தொடரப்படுவதையும், கொலை செய்யப்படுவதையும் தவிர்க்க முடிவதும் கைது செய்யப்பட்ட அதே கணத்தில் அல்லது அதுபற்றித் தெரிந்து கொண்ட சந்தர்ப்பத்திலேயே சம்பந்தப்பட்ட இடங்களுக்கு அறிவித்தல் மூலம் மாத்திரமேயாகும்.

**தகவல்களுக்கு**
**தொடர்பு கொள்ளவும்**
**038 2235191**
**077 3201270**

# எமது தமிழ் வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | பொலிஸாரும் சட்ட விதிகளும் | -30/- |
| 2. | இம்சையற்ற சிறுவர் வாழ்வு | -70/- |
| 3. | அமைதியின் குரல் | -100/- |
| 4. | பாடசாலையிலிருந்து துஷ்பிரயோகம் துர்நடத்தைகளை ஒழிப்போம் | -70/- |
| 5. | இலங்கைப் பொலிஸாரின் சட்டவிரோத நடவடிக்கை | -35/- |
| 6. | பொலிஸூம் சட்டமும் | -50/- |

**தொடர்பு:-**

Janasansathaya
81/2- Arthur-v- Dias Mawatha
Panadura.
Phone/Fax- 038 2235191
email: manava@sltnet.lk.

# ஜனசங்சதய

**மனித உரிமை சார்ந்த பிரச்சினைகளின் போது உங்களுக்கு உதவ நாம் தயாராயுள்ளோம்.**

**தொடர்பு:-**

தொலைபேசி/பெக்ஸ்- **038 2235191**
ஈமெயில் **: manava@sltnet.lk.**
முகவரி **: 81/2- Arthur-v- Dias Mawatha Panadura**

## எமது தமிழ் வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | [illegible] | -30/- |
| 2. | [illegible] | -20/- |
| 3. | [illegible] | -150/- |
| 4. | [illegible] | -70/- |
| 5. | [illegible] | -35/- |
| 6. | [illegible] | -30/- |


தொடர்பு:-

Janasansadaya
81/2, Arthur-v- Dias Mawatha,
Panadura.
Phone/Fax- 038 2235191
email: manava@sltnet.lk


## [illegible]

[illegible]


தொடர்பு:-
தொலைபேசி/பெக்ஸ்- 038 2235191
ஈமெயில் : manava@sltnet.lk
முகவரி : 081/2, Arthur-v- Dias Mawatha
Panadura

அனுசரணை

ASIAN HUMAN RIGHTS COMMISSION

ஆசிய மனித உரிமை கமிஷன்

RCT டென்மார்க்

ජනසංසදය
ஜனசங்சதய
JANASANSADAYA
People's Forum

www. Janasansadaya.org
manava@sltnet.lk

விலை. 35.00

ISBN 978-955-1687-43-4